362

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**சட்டக்கற்கைகள் துறை**

**சட்ட பட்டமாணி நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் - 06**

**தொடர் மதிப்பீட்டு பரீட்சை 02 - 2022/2023**

**LLU6814– தீங்கியல் சட்டம்**

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

**திகதி:- 04.12.2023** **நேரம்: பி.ப. 03.30 - பி.ப 04.30**

ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடையளிக்குக.
ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வழங்கப்படும்.

- தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.
- அதிகாரமற்ற ஆவணங்களையும், கையடக்கத் தொலைபேசியையும் பரீட்சை மண்டபத்தில் உடமையில் வைத்திருத்தல் பரீட்சை குற்றம் ஒன்றாகும்.

01. "செயலே செப்பும் என்ற மூதுரை, ஒரு சான்று விதி மாத்திரமே ஆகும். அத்துடன் இவ்விதி எதிர்வாதியுடைய கவனயீனத்தை வழக்காளி ஸ்தாபிப்பதில் இருந்து அவரை விடுவிக்காது".

    செயலை செப்பும் என்ற மூதுரையின் கூறுகளை தீர்ப்புச்சட்டத்துடன் தொடர்புறுத்தி விளக்குவதுடன் நீதிமன்றில் இம் மூதுரை பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக.

02. அஜித் தனது பெண் நண்பியை தன்னுடைய காரில் இரவு நேர கேளிக்கை விடுதிக்கு அழைத்துச் சென்றான். அஜித் விடுதியில் அதிகளவு மதுவை அருந்தியமையினால் மாலாவை வாகனத்தை செலுத்தி தன்னை வீட்டில் விடுமாறு வேண்டினான். மாலா இன்னும் பயிலுனர் சாரதி என்பதுடன் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவில்லை. அவள் காரை செலுத்த விரும்பவில்லை ஆயினும் அஜித் அவளுடைய கன்னத்தில் அறைந்து அவள் தனது வேண்டுகோளை நிறைவேற்றா விட்டால் அவளை விட்டுவிட்டு வீடு செல்வதாக அச்சுறுத்தினான். மாலா நள்ளிரவு இரண்டு மணி ஆகையால் தனிமையில் இருப்பதையிட்டு அச்சமுற்று அவனுடைய கோரிக்கைக்கு செவி சாய்த்தாள்.

    வீட்டை நோக்கிச் செல்லும் அரைவாசி தூரத்தை கடந்த பின்பு நாய் ஒன்று வீதியின் குறுக்கே பாய்ந்தது. மாலா நாயை தவிர்ப்பதற்காக வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றின் மீது மோதினாள். அஜித் முதுகெலும்பு காயங்களுக்கு உள்ளானதுடன் தற்போது அவன் பக்கவாதத்தினால் செயலிழந்துள்ளான். மாலாவுடைய இரண்டு கால்களும் உடைந்து அவள் மூன்று மாதங்கள் சக்கர நாற்காலியில் காலத்தை கழித்தாள்.

    அஜித் மாலா ஆகிய இருவரும் தமது காயங்களுக்காக ஒருவருக்கொருவர் வழக்குத்தாக்கல் செய்ய விரும்புகின்றனர். அவர்களுக்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -